# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 65/பேரூ/2024**
**நாள் : 27.12. 2024**

| | | |
|---|---|---|
| திரு. R. மயில்சாமி,<br>புதுவிளாங்குடி, மதுரை மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி,<br>திண்டுக்கல் மாவட்டம்.<br><br>காசி சிறப்பு மருத்துவமனை உரிமையாளர்,<br>திண்டுக்கல் மாவட்டம். | – | எதிர் மனுதாரர்கள் |

மதுரை மாவட்டம், புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி, என்பவரின் 18.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.09.2023 அன்று பெறப்பட்டு, 65/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் 5 என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள கதவு எண்.9-3-33ல் இயங்கி வரும் காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை 24x7- மணி நேரமும் செயல்பட்டு வரக்கூடிய இம்மருத்துவமனை கட்டடத்திற்கு அரசு விதிகளின்படி வாகனம் நிறுத்துவதற்கு (Parking Space) இடம் விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை வரைபட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமல் இருப்பதால் மருத்துவமனைக்கு வரும் உள்நோயாளிகள், புறநோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் வரும் வாகனங்களை தெருவில் நிறுத்துவதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மருத்துவமனை எதிரே பள்ளி (school) இருப்பதினால், பார்வையாளர்கள் இவ்வழி செல்ல முடியாமல் அவதிப்படுகிறார்கள். மேலும் இவ்வழியே

செல்லும் பள்ளி, கல்லூரி ஆம்புலன்ஸ் வாகனங்களும் செல்ல முடியாமல் சிரமப்பட்டு வருகின்றன.

மேற்படி “காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை” கட்டடத்திற்கு அரசு விதிகளின்படி 13 அடி இடைவெளி இடம் விடாமல் (set back spaces) சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் அவசரகால வழி (Emergency exit) விடாமலும், சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. காசி மருத்துவமனை பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. மேலும், மேற்படி காசி மருத்துவமனைக்கு தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய்த் துறையின் அனுமதி உரிமம் பெறவில்லை. மேற்படி மருத்துவமனையை கண்காணிக்கத் தவறிய வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், மேற்படி காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை, வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடாமலும் - Set back space விடாமலும் மற்றும் அவசர காலவழி விடாமலும் அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் மருத்துவமனை கட்டடத்தை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி விரைவான நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவன்புடனும், தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.07.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 12.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“காசி ஸ்பெசாசிலிட்டி மருத்துவமனை கட்டடத்திற்கு வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி கட்டடம் உரிமம் எண்.58/2003–04, நாள் 01.10.2023 மற்றும் கட்டட உரிமம் எண்.19/2006-2007, நாள் 19.06.2006–ன்படி கட்டடம் உரிமம் வழங்கப்பட்டு தரைத் தளத்தில் மருத்துவமனையாகவும், முதல் தளத்தில் மருத்துவர் குடியிருப்பாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும் மருத்துவமனை கட்டடத்தை நேரில் சென்று ஆய்வு செய்ததில் மருத்துவமனைக்கு தனியாக வாகனம் நிறுத்துமிடம் எதும் ஒதுக்கப்படவில்லை. இருப்பினும் மருத்துமனைக்கு எதிர்புறம் மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி சுற்றுச்சுவரை ஒட்டியுள்ள காலியிடத்தில் மற்றும் மருத்துவமனைக்கு வடக்கு பகுதியில் உள்ள 30 அடி நீள சாலையில் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இன்றி வாகனங்கள் நிறுத்தப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதியில் குடியிருப்பு கட்டடங்கள் குறைவாக உள்ளதாலும், நகர்ப்பகுதியை விட்டு வெளியில் அமைந்துள்ளதாலும் போக்குவரத்து இடையூறுகள் ஏதுமில்லை. இருப்பினும் 30 தினங்களுக்குள் புதியதாக ஒரு வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்திக்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க மருத்துவமனை நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் திரு. ஆர். மயில்சாமி என்பவரையும், எதிர்மனுதாரரான வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரையும் மற்றும் புகாருக்குள்ளான காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை உரிமையாளரையும் 17.12.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.12.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு R. மயில்சாமி 17.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

“திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரே உள்ள கதவு எண் 9–3–33 –இல் இயங்கிவரும் காசி சிறப்பு மருத்துவமனை கீழ்க்காணும் விதிமீறல்களில் செயல்பட்டு வருகிறது.

- இம் மருத்துவமனை கட்டடத்திற்கு. 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடம் (உரிமம்) சட்டத்தின் படி வருவாய்த் துறையில் அனுமதி பெறப்படவில்லை.
- 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ், மேற்படி கட்டடத்திற்கு நகர் ஊரமைப்புத் திட்ட இயக்கத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை.
- மருத்துவமனையின் நாற்புறமும் 6 மீட்டர் இடைவெளி ஒதுக்கப்படவில்லை (Setback)
- கார் போன்ற வாகனங்களை நிறுத்துவதற்கு போதிய இடவசதி இல்லை. இதனால் பள்ளிக்கு அருகில் வாகனங்கள் நிறுத்துவதால் பள்ளி மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது.
- இம் மருத்துவமனை அவசரகால வழி இல்லாமலும் செயல்பட்டுவருகிறது.

எனவே, சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மேற்படி மருத்துவமனை கட்டடத்தை தமிழ்நாடு நகர ஊரமைப்பு சட்டம் 1971 மற்றும் பிரிவு 56, 57–இன் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆ. சரவணக்குமார் என்பவர் 17.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

“திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரே உள்ள கதவு எண் 9–3–33 –இல் இயங்கிவரும் காசி சிறப்பு மருத்துவமனைக்கு வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியின் கட்டட உரிமம் எண்.58/2003-2004 நாள் 1.10.2003இல் தரைதளம் 2916 சதுரஅடியில் மருத்துவமனையாகவும் மற்றும் முதல் தளம் 2916 சதுர அடிக்கு குடியிருப்பாகவும் மற்றும் கட்டட உரிமம் எண்.19/2006-2007 நாள் 19.06.2006–ன்படி தரைதளம் 1154 சதுர அடி மற்றும் முதல் தளம் 499.50 சதுர அடியில் வணிக பயன்பாடாகவும் கட்டட உரிமம் பெற்று தரைத் தளத்தில் மருத்துவமனையாகவும் முதல் தளம் மருத்துவர் குடியிருப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

மேற்படி மருத்துவமனையினை நேரடி ஆய்வு செய்ததில் வாகன நிறுத்துமிடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை. இருப்பினும் மருத்துவமனைக்கு எதிரிலுள்ள காலி இடத்திலும் மற்றும் மருத்துவமனைக்கு வடக்கே உள்ள 30 அடி சாலையில் போக்குவரத்திற்கு இடையூறுமின்றி வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இப்பகுதியில் அதிக குடியிருப்பு கட்டடங்கள் இல்லாமல் நகர்ப் பகுதிக்கு வெளியில் அமைந்துள்ள இடம் என்பதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுவதில்லை.

மேலும் இம்மருத்துவமனையின் பின்புறம் மூன்று அடி இடைவெளிவிட்டு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மருத்துவமனைக்கு வரும் பொது மக்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு 30 நாட்களுக்குள், தனியாக நிறுத்துமிடம் ஒதுக்கீடு செய்யுமாறு இம்மருத்துவமனை நிருவாகத்திற்கு 06.12.2024 நாளிட்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதனை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” – என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான காசி சிறப்பு மருத்துவமனை உரிமையாளர் டாக்டர். என் முருகேசபாண்டியன் என்பவர் தனது 17.12.2024 நாளிட்ட கடிதத்தில், தனது தரப்பு நியாயங்களை எடுத்துக்கூற தனது பிரதிநிதியாக திருமதி. கலையரசி என்பவரை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, திருமதி. கலையரசி என்பவர் 17.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :-

“திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரே உள்ள கதவு எண் 9–3–33 –இல் இயங்கிவரும் காசி சிறப்பு மருத்துவமனைக்கு வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியின் கட்டட உரிமம் எண்.58/2003-2004 நாள் 1.10.2003 மற்றும் கட்டட உரிமம் எண்.19/2006-2007 நாள் 09.06.2006ன்படி தரைத் தளத்தில் மருத்துவமனையாகவும் முதல் தளம் மருத்துவர் குடியிருப்பாகவும் கட்டும் வகையில் உரிமம் வழங்கப்பட்டு, அதன்படி செயல்பட்டு வருகிறது. மருத்துவமனை முன்புறம் 40 அடி ரோடு மஞ்சளாற்றில் முடிவடைகிறது. இடது புறம் 20 அடி ரோடு முட்டு சந்தில் முடிவடைகிறது. இம்மருத்துவமனையின் நாற்புறமும் போதிய இடைவெளி விடப்பட்டுள்ளது.

மருத்துவமனையின் பின்புறம் மூன்று அடி இடைவெளிவிட்டு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மருத்துவமனையின் முன்புறத்தில் 15 1/2 X 50 அடியில் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையில் அவசரகால வழி செயல்பட்டு வருகிறது. மருத்துவமனையின் மையப் பகுதியில் 5 அடி பாதையில் அவசர வழி (Fire Exit) அமைக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை பொது மக்களிடமிருந்து எவ்வித புகாரின்றி 21 வருடங்களாக இம் மருத்துவமனையானது பேரூராட்சியை சுற்றியுள்ள மலைவாழ் மக்களுக்கு சுகாதார கேடின்றி உரிய அவசர கால மருத்துவ உதவிகளை செய்து நன்முறையில் செயல்பட்டு வருகிறது என்பதனை இம்முறை மன்றநடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” – என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் மற்றும் மருத்துவமனை உரிமையாளரின் சார்பாக திருமதி கலையரசி என்பவரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. R. மயில்சாமி என்பவர் தனது 18.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட கதவு எண். 9-3-33, மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் அமைந்துள்ள காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையானது நகர் ஊரமைப்புத் திட்ட இயக்கத்தின் ஒப்புதலின்றியும், மருத்துவமனையின் நாற்புறமும் போதிய இடைவெளியின்றியும், வாகன நிறுத்தம் இடமில்லாமலும் மற்றும் அவசரகால வழி இல்லாமலும் செயல்பட்டு வருவதாக புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் காசி சிறப்பு மருத்துவமனைக்கு வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியின் 01.10.2003 நாளிட்ட கட்டட உரிமம் எண்.58/2003-04ன்படி தரை தளத்தில் 2916 சதுர அடி பரப்பளவில் மருத்துவமனையாகவும் முதல் தளத்தில் 2916 சதுர அடியில் குடியிருப்பாகவும் கட்ட கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் பேரூராட்சியின் 09.06.2006 நாளிட்ட கட்டட உரிமம் எண்.19/2006-07ன்படி தரை தளத்தில் 1154 சதுர அடியில் மருத்துவமனையாகவும் மற்றும் முதல் தளத்தில் 499.50 சதுர அடியில் மருத்துவர் குடியிருப்பாகவும் கட்ட, கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

மேற்படி வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சியால் 01.10.2003 மற்றும் 19.6.2006ன்படி தரை தளத்தில் 2400 சதுர அடி மற்றும் 928 சதுர அடியும் கொண்ட மருத்துவமனையாகவும்

மற்றும் முதல் தளத்தில் 2594 சதுர அடி பரப்பளவில் மருத்துவர் குடியிருப்பாகவும் கட்டப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருவதாக மருத்துவமனை கட்டட உரிமையாளரின் அறிக்கை மூலம் அறிய வருகிறது.

சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரின் சுற்றறிக்கை எண்.41474/93TI நாள் 24.09.1993ல் உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் கீழ்க்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திட்ட குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சி குழுமங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளுக்கு விதிகளுக்கு உட்பட்டு, திட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் கீழ்காண் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டட பயன்பாடு | மொத்த தளங்கள் | குடியிருப்பு எண்ணிக்கை | மொத்த தளப்பரப்பு | கட்டட வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு | தரை தளம் + முதல் தளம் | 1 | 200 சதுர மீட்டர் | தனித்த கட்டடம் |
| 2 | வணிக கட்டடம் | தரை தளம் | - | 100 சதுர மீட்டர் | தனித்த கட்டடம் |

இந்நிலையில், 24.09.1993 நாளிட்ட சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரின் சுற்றறிக்கையின்படி, 2000 சதுர அடி பரப்பளவுக்குள் குடியிருப்பு கட்டடம் கட்டவும் மற்றும் 1000 சதுர அடிப்பரப்பளவுக்குள் வணிக கட்டடம் கட்டவும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், புகாராக தெரிவிக்கும் மருத்துவமனைக்கு தரை தளத்தில் 4070 சதுர அடி (2916 + 1154) பரப்பளவில் மருத்துவமனை கட்டவும் மற்றும் முதல் தளத்தில் 3415.58 சதுர அடி (2916+499.50) பரப்பளவில் குடியிருப்பு கட்டடம் கட்டவும் உள்ளூர் திட்டக் குழுமங்களின் (Local Planning Authority) திட்ட அனுமதி பெறப்படாமல், தன்னிச்சையாக வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி நிலையிலேயே விதி மீறி கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது.

இவ்வாறு காசி சிறப்பு மருத்துவமனை கட்டடத்திற்கு சட்டத்திற்கு புறம்பாக விதி மீறி கட்டட அனுமதி வழங்கிய வத்தலக்குண்டு தேர்வு நிலை பேரூராட்சியின் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேருராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறு ஆணையிடுகிறது.

மருத்துவமனையின் நாற்புறமும் போதிய இடைவெளி (set back) இல்லாதது குறித்த புகாருக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மருத்துவமனையின் பின்புறம் 3 அடி இடைவெளி உள்ளது என தெரிவித்துள்ளார். ஆனால், மருத்துவமனையின் சார்பாக விசாரணையில் கலந்துகொண்ட திருமதி. த. கலையரசி என்பவர் மருத்துவமனையின் நாற்புறமும் போதிய இடைவெளி விடப்பட்டுள்ளது என தெரிவித்து அதற்கான ஆதாரமாக புகைப்படங்கள் சமர்ப்பித்துள்ளார்.

மருத்துவமனையில் வாகன நிறுத்துமிடம் ஏதும் ஒதுக்கப்படவில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், திருமதி. த. கலையரசி என்பவர் மருத்துவமனையின் முன்புறத்தில் 15 1/2 x 50 அடியில் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது என வாக்குமூலத்தில் தெரிவித்து அதற்கான புகைப்படத்தையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் மருத்துவமனையின் மையப் பகுதியில் 5 அடி பாதையில் அவசர வழி (Fire Exit) அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் நிலையில், காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையில் இடைவெளி விடப்படுவது, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவற்றில் வத்தலக்குண்டு சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைக்கும் / வாக்குமூலத்திற்கும் மற்றும் புகைப்படங்களுடன் திருமதி. த. கலையரசி என்பவர் அளித்த வாக்குமூலத்திற்கும் முரண்பாடுகள் இருப்பதால், இதன்பொருட்டு உண்மை நிலை அறியும் வகையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை மேற்படி காசி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையை நேரடியாக கள ஆய்வு செய்து அறிக்கையினை பெற்று, ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அளிவுறுத்துகிறது.

2024 ஆம் ஆண்டு, டிசம்பர் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
   பிளாட் 5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புது விளாங்குடி,
   மதுரை – 18
2. செயல் அலுவலர்,
   வத்தலக்குண்டு சிறப்புநிலை பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.
3. டாக்டா என். முருகேசபாண்டியன்,
   உரிமையாளர்,
   காசி சிறப்பு மருத்துவமனை,
   மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைபள்ளி தெரு,
   வத்தலக்குண்டு,திண்டுக்கல் மாவட்டம்.
4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28
5. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/12/24

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்